இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வெள்ளிக்கிழமை 20.03.2026

# பழனிசாமி ஆட்சியின் பழைய நிலவரங்கள் - 2

★ 2019 ஆகஸ்ட் 27 - சீர்காழி அருகே எடக்குடி வடபாதி கிராமத்தைச் சேர்ந்த அ.தி.மு.க. பிரமுகரும் வைத்தீஸ்வரன் கோவில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கத் தலைவருமான அஞ்சம்மாள் கைது செய்யப்பட்டார். வைக்கோல் போரில் 47 கேன்களில் 1600 லிட்டர் சாராயத்தை அவர் வைத்திருந்தார்.

★ 2020 ஏப்ரல் 14 - யூடியூப் பார்த்து கள்ளச்சாராயம் காய்ச்சிய நபர்கள் என்ற வீடியோவை பாலிமர் சேனல் வெளியிட்டது.

★ 2020 ஜூன் 26 - வேலூர் மாவட்டம் பென்னாத்தூர் அருகே கள்ளச்சாராயக் கடத்தல் பாதையை அடைத்தவரை நாட்டுத் துப்பாக்கியால் சுட்ட 3 பேர் என்ற செய்தியை தந்தி டிவி வெளியிட்டது.

★ 2020 ஜூலை 28 - மயிலாடுதுறையில் பாண்டி ஐஸ் என்ற பெயரில் கள்ளச்சாராயம் விற்றதாக ஜெயா ப்ளஸ் செய்தி வெளியிட்டது.

★ 2021 ஜூன் 26 - ஈரோடு மாவட்டம் கவுந்தப்பாடியில் கள்ளச்சாராய ஊறல் போட்டு வைத்திருந்த அ.தி.மு.க. பிரமுகர் நேரு என்பவர் கைது செய்யப்பட்டார்.

★ 2021 ஜூலை 27 - கோவையில் கள்ளச்சாராயம் காய்ச்சிய அ.தி.மு.க. பிரமுகர் கைது செய்யப்பட்டார். அவரிடம் இருந்து 150 லிட்டர் சாராய ஊறல், 4 லிட்டர் கள்ளச்சாராயம் கைப்பற்றப்பட்டது. இவை அனைத்தும் சமூக ஊடகங்களில் இன்னமும் இருக்கும் செய்திகள் ஆகும்.

போதைப்பொருட்கள் அதிகமாகிவிட்டன என்று பொய் சொல்லி போராட்டம் நடத்தி வருகிறார் பழனிசாமி. அவரது ஆட்சிக் காலத்தில் குட்கா விற்பனை அவர்களது ஆசிர்வாதத்துடன் நடந்ததை சி.பி.ஐ. வழக்காக தாக்கல் செய்து விசாரணை நடத்தி வருகிறதே!

சென்னையில் சட்டவிரோதமாக தடை செய்யப்பட்ட குட்கா பொருள்களை விற்பனை செய்ய அ.தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், ஐ.பி.எஸ். அதிகாரிகள், வணிக வரித்துறை அதிகாரிகள் மற்றும் சென்னை மாநகராட்சி அதிகாரிகளுக்கு லஞ்சம் தரப்பட்டதாக 2017-ஆம் ஆண்டு அ.தி.மு.க. ஆட்சியில் குற்றச்சாட்டு எழுந்தது. குட்கா வியாபாரிகளிடம் வருமான வரித்துறை விசாரணை நடத்துகிறது. அப்போது தங்களது வியாபாரத்துக்கு துணை நின்றவர்கள் அ.தி.மு.க. ஆட்சியில் யார் யார் என்பதை டைரி எழுதி வைத்திருந்தார்கள் வியாபாரிகள். அந்த நிறுவனத்தில் இருந்து 40 கோடி ரூபாய் வரை லஞ்சம் பெறப்பட்டுள்ளது அ.தி.மு.க. ஆட்சியில்.

இது தொடர்பான வழக்கில் மத்திய கலால் வரித்துறை தாக்கல் செய்த பதிலில், **“டெல்லியில் இருந்து தமிழ்நாட்டுக்கு ஏராளமான குட்கா பொருள்கள் கொண்டு வரப்பட்டுள்ளது. இதை விற்பதற்காக ரூ.55 கோடி வரை ஹவாலா முறையில் பணப் பரிமாற்றம் செய்யப்பட்டுள்ளது”** என்று கூறப்பட்டு இருந்தது. வருமான வரித்துறையும் இதனை வலிமைப்படுத்துவது மாதிரியான ஆதாரங்களைக் கொடுத்தது. தலைமை நீதிபதி இந்திரா பானர்ஜி, அப்துல் குத்தூஸ் அமர்வு, சி.பி.ஐ. விசாரணைக்கு உத்தரவிட்டது. இவை அனைத்தும் பழனிசாமி ஆட்சியில் நடந்தவை ஆகும்.

**ரூ.40 கோடிக்கு மேல் லஞ்சம் பெற்றது தொடர்பாக வருமான வரித்துறை அ.தி.மு.க. ஆட்சியில் தலைமைச் செயலாளருக்கு ஒரு கடிதம் அனுப்பியது. அதில் அ.தி.மு.க. ஆட்சிக் காலத்து அமைச்சரான விஜயபாஸ்கர், இரு டி.ஜி.பி.க்கள் பெயர்கள் இருந்தன. ஆனால் லஞ்ச ஒழிப்புத் துறையின் முதல் தகவல் அறிக்கையில் இவர்கள் பெயர் இடம் பெறாத வகையில் பழனிசாமி இவர்களைக் காப்பாற்றினார். சில ஊழியர்களை மாட்டி விட்டு அ.தி.மு.க. அமைச்சர்களை தப்பிக்க வைத்தார் பழனிசாமி.**

அ.தி.மு.க. அமைச்சர் லஞ்சம் பெற்றதற்கான ஆதாரங்கள் கொண்ட ஒரு கோப்பு ஒன்றை வருமான வரித்துறை அனுப்பி இருந்தது. அந்த ஆவணங்களையே காணாமல் ஆக்கினார்கள் பழனிசாமி ஆட்சியில். இதுதான் பழனிசாமி, தனது ஆட்சிக் காலத்தில் போதைப் பொருட்களை ஒழித்த லட்சணம் ஆகும்.

★ **எடப்பாடி பழனிசாமிக்கு பாதுகாப்புக்குப் போன போதுதான் சிறப்பு டி.ஜி.பி. ராஜேஸ்தாஸ், பெண் எஸ்.பி.க்கு பாலியல் தொல்லை கொடுத்தார். காவலர்களுக்குமே பாதுகாப்பு இல்லாத ஆட்சியை பழனிசாமி நடத்தினார்.**

★ **சென்னை கேளம்பாக்கம் பகுதியில் சாப்ட்வேர் நிறுவனத்தில் பணியாற்றிய உமா மகேஸ்வரி கொடூரமாகக் கொலை செய்யப்பட்டார்.**

★ **சென்னை நுங்கம்பாக்கம் ரயில் நிலையத்தில் சுவாதியை அரிவாளால் வெட்டி படுகொலை செய்து விட்டு தப்பிய ராம்குமார் சிறையிலேயே மர்மமான முறையில் இறந்தார்.**

★ **காதலை ஏற்க மறுத்த விழுப்புரம் 12ஆம் வகுப்பு மாணவி நவீனா உயிரோடு எரிக்கப்பட்டார்.**

★ **கரூர் பொறியியல் கல்லூரியில் சோனாலியை, முன்னாள் மாணவன் உதயகுமார் வகுப்பறையில் நுழைந்து கட்டையால் அடித்துக் கொலை செய்தார்.**

★ **தூத்துக்குடியில் கிறிஸ்துவ ஆலயத்துக்குள் நுழைந்து ஃபிரான்ஸினா என்ற இளம் பள்ளி ஆசிரியை வெட்டிக் கொலை செய்யப்பட்டார்.**

★ **பேராசிரியை நிர்மலா தேவி, தன்னிடம் படிக்கும் மாணவிகளைப் பாலியல் பேரம் பேசும் ஆடியோ வெளியாகி, மாநிலமே அதிர்ந்தது.**

★ **தர்மபுரி இளவரசன் - திவ்யா காதல் கலப்புத் திருமணத்தின் கொடூரத் துயரங்களை மறக்க முடியுமா? இதற்கெல்லாம் பழனிசாமியால் பதில் சொல்ல முடியுமா?**

★ **தேசிய குற்ற பதிவேடு ஆவணக் காப்பகம் (என்.சி.ஆர்.பி.) வெளியிட்ட அறிக்கையின் படி இந்தியாவில் கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் 6ஆவது இடத்தை எட்டியதுதான் எடப்பாடி ஆட்சிக் காலம் ஆகும்.**

★ **கொலைகள் அதிகம் நடந்த மாநகரங்களில் நான்காவது இடத்தை சென்னை பெற்றது எடப்பாடி ஆட்சிக் காலம்.**

★ **இந்திய தண்டனைச் சட்டப்படியான குற்றங்களில் 6ஆவது இடத்தில் தமிழ்நாட்டைக் கொண்டு போய் நிறுத்தியவர் பழனிசாமி.**

★ **பொதுமக்கள் மீது சட்டவிரோதமாக கூடியதாக அதிகம் வழக்குப் போட்டதில் 4 ஆவது மாநிலமாக தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

★ **பட்டியல் மற்றும் பழங்குடியினர் கொலை அதிகம் நடக்கும் மாநிலப் பட்டியலில் 4ஆவது இடத்தில் தமிழ்நாட்டை ஆக்கியவர் பழனிசாமி.**

★ **பெண் குழந்தைகளுக்கு எதிரான பாலியல் வன்முறையில் 8ஆவது இடத்தில் தமிழ்நாட்டை நிறுத்தியவர் பழனிசாமி.**

★ **தற்கொலைகள் அதிகம் நடக்கும் மாநிலங்களின் பட்டியலில் தமிழ்நாட்டை 2ஆவது இடத்தில் நிறுத்தியது பழனிசாமி ஆட்சிக்காலம்.**

இவை எதையும் மக்களும் மறக்கவில்லை. அதற்கான ஆதாரங்களையும் அழிக்க முடியாது. தேர்தல் நேரத்தில் பத்துப் பேரைக் கூட்டி வைத்து ஆர்ப்பாட்டம் என்ற பெயரால் தனது இருப்பை பழனிசாமி காட்டிக் கொள்ள மட்டுமே அவதூறுகள் பயன்படும்.



கழகத் தலைவரும், முதலமைச்சருமான மு.க. ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் நேற்று (19.3.2026) சென்னை, அண்ணா அறிவாலயலத்தில், த.வெ.க. கட்சியைச் சார்ந்த நடிகை ரஞ்சனா நாச்சியார் கழகத்தில் தன்னை இணைத்துக் கொண்டார். இந்நிகழ்வின்போது, கழகப் பொதுச் செயலாளர், அமைச்சர் துரைமுருகன், முதன்மைச் செயலாளர், அமைச்சர் கே.என்.நேரு, அமைச்சர் தா.மோ. அன்பரசன், அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி, புதுச்சேரி மாநில தி.மு.க. ஒருங்கிணைப்பாளர், கழக கொள்கைப் பரப்புச் செயலாளர், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன் ஆகியோர் உடனிருந்தனர்.

### 4 ஆண்டுகளில் 29 சதவிகிதம் உயர்ந்து பிரம்மாண்ட வளர்ச்சி!

## இந்திய ஜவுளி ஏற்றுமதியில்

# தமிழ்நாடு முதலிடம்!



## முதல்வர் மு.க.ஸ்டாலின்

## தலைமையிலான ஆட்சியில் மாபெரும் சாதனை!

**சென்னை, மார்ச் 20-**

***இந்திய ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு முதலிடம்! 7997.17 மில்லியன் டாலர்! தேசிய அளவிலான மொத்த ஜவுளி ஏற்றுமதியில் இது 21.84 சதவீதம்! 2020-2021 இல் தமிழ்நாட்டின் ஜவுளி ஏற்றுமதி மதிப்பு 6193.39 மில்லியன் டாலர் மட்டுமே! 4 ஆண்டுகளில் 29 சதவீதம் உயர்ந்து பிரமாண்ட வளர்ச்சி! அதாவது 1803.78 மில்லியன் டாலர் உயர்வு! முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சியில் ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு தொடர்ந்து மாபெரும் சாதனை படைத்துள்ளது.***

*ஒன்றிய அரசின் ஏற்றுமதி- இறக்குமதி விவரங்கள் குறித்து ஆண்டு வாரி வர்த்தகப் பகுப்பாய்விற்கான தேசிய ஏற்றுமதி-இறக்குமதிகளை பதிவு செய்திடும் நிர்யாத் நிறுவனம் (National Import export Record for Yearly Analysis of Trade - NIRYAT) ஆண்டு தோறும் ஆய்வறிக்கை வெளியிட்டு வருகிறது.*

*இந்த நிர்யாத் நிறுவனம் 2024-2025 ஆம் ஆண்டுக்கான ஜவுளி ஏற்றுமதிகள் குறித்த அறிக்கையை தற்போது வெளியிட்டுள்ளது. இந்த அறிக்கையின்படி இந்தியாவில் இருந்து ஏற்றுமதி செய்யப்பட்டுள்ள ஜவுளி துணிகளின் மதிப்பு 36,610 மில்லியன் டாலர். இதில் தமிழ்நாடு மட்டும் 7997.17 மில்லியன் டாலர் மதிப்புடைய ஜவுளித் துணிகளை ஏற்றுமதி செய்து ஜவுளி ஏற்றுமதியில் தமிழ்நாடு இந்தியாவில் முதலிடம் என அறிவிக்கப்பட்டுள்ளது.*

*தமிழ்நாட்டினை அடுத்து, தொழில் வளர்ச்சியில் எப்போதும் முன்னணியில் நிற்கும் மாநிலங்களான குஜராத் மாநிலம் 5646.01 மில்லியன் டாலர் மதிப்புடைய ஜவுளித்துணிகளை ஏற்றுமதி செய்து இரண்டாம் இடமும்; மராட்டிய மாநிலம் 3831.28 டாலர் மதிப்புடைய ஜவுளித்துணிகளை ஏற்றுமதி செய்து மூன்றாம் இடமும் பெற்றுள்ளன.*

*உத்திரபிரதேசம், மத்திய பிரதேசம், மேற்குவங்கம் முதலிய பல்வேறு மாநிலங்களும் அடுத்தடுத்த நிலைகளில் ஜவுளித் துணிகளை ஏற்றுமதி செய்துள்ளன என்றும் இந்த நிர்யாத் ஆய்வறிக்கை கூறியுள்ளது. இந்த அறிக்கையின் படி தமிழ்நாட்டின் ஜவுளி ஏற்றுமதி இந்தியாவில் மற்ற அனைத்து மாநிலங்களையும் விட மிகவும் அதிகமாகும்.*

*நிர்யாத் நிறுவனம் வெளியிட்டுள்ள இந்த அறிக்கையின் மூலம் மேலும் ஓர் உண்மை வெளிப்பட்டுள்ளது. அதாவது, தமிழ்நாட்டில் மு.க.ஸ்டாலின் அவர்களுடைய ஆட்சி அமைவதற்கு முன் 2020-2021 ஆம் ஆண்டில் தமிழ்நாட்டில் இருந்து ஏற்றுமதியான ஜவுளித் துணிகளின் மதிப்பு 6193.39 மில்லியன் டாலர் மட்டுமே.*

*மு.க.ஸ்டாலின் அவர்கள் தமிழ்நாட்டின் பன்முக வளர்ச்சியிலும் தீவிர கவனம் செலுத்தி ஒவ்வொரு துறையிலும் செயல்படுத்தியுள்ள திட்டங்கள் காரணமாக தமிழ்நாட்டின் வளர்ச்சி அபரிமிதமாக உயர்ந்துள்ளது. இந்த ஜவுளித் துறையில் சிறப்புச் சலுகைகள் வழங்கி ஜவுளித் தொழிலுக்கும், தொழிலாளர்களுக்கும் ஊக்கம் அளித்து வருவதால் ஜவுளி ஏற்றுமதியிலும் தேசிய அளவில் 21.84 சதவீதம் பங்களித்து, தமிழ்நாட்டில், 2020-2021 ஆண்டினைவிட 2024-2025 ஆம் ஆண்டில் 1803.78 மில்லியன் டாலர் அளவுக்கு; அதாவது*

*4 ஆண்டுகளில் 29 சதவீதம் அளவுக்கு அதிகமாக ஏற்றுமதி செய்து மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆட்சி மாபெரும் சாதனை நிகழ்த்தியுள்ளது என்பதும் தெளிவாக விளங்குகிறது.*




## தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகளுக்கு எனது உளம்நிறைந்த வாழ்த்துகள்!

## வரும் மே மாதம் அமைய உள்ள திராவிட மாடல் 2.0 அரசுக்கும் இந்த உகாதி திருநாள் தொடக்கமாக அமையட்டும்!

## தலைவர், முதல்வர் மு.க.ஸ்டாலின் வாழ்த்துச் செய்தி!

**சென்னை, மார்ச் 20-**

**கழகத் தலைவர் - முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் உகாதி வாழ்த்துச் செய்தி வருமாறு :-**

உகாதிப் பண்டிகையைக் கொண்டாடும் தெலுங்கு, கன்னட உடன்பிறப்புகள் அனைவருக்கும் எனது உளம்நிறைந்த வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டில் உகாதி திருநாளுக்கு அரசு விடுமுறை அளித்தது தொடங்கி, நம் மாநிலத்தில் வாழும் மொழிச்சிறுபான்மையின மக்களுக்கு என்றும் காவலரணாகத் திராவிட முன்னேற்றக் கழக அரசு திகழ்ந்து வருகிறது.

திராவிட மொழிக் குடும்பத்தைச் சேர்ந்த மொழிகளைப் பேசும் தென்மாநில மக்கள் அனைவரும் ஒற்றுமையாகச் செயல்பட்டு, இந்தி ஆதிக்கத்தையும் திணிப்பையும் வீழ்த்திட வேண்டும் என்பதையும், மாநில சுயாட்சியை நிலைநாட்ட வேண்டும் என்பதையும் தொடர்ந்து வலியுறுத்தி வரும் இயக்கம் தான் திராவிட முன்னேற்றக் கழகம். அண்மைக் காலங்களில், வரிப்பகிர்வில் தென்னிந்திய மாநிலங்களுக்கு இழைக்கப்படும் அநீதி, தொகுதி மறுவரையறையால் நாடாளுமன்றத்தில் நமது வலிமையைக் குறைக்கும் சதி, திராவிடப் பண்பாட்டை மதிக்காத ஒன்றிய பா.ஜ.க. அரசின் போக்கு ஆகியவற்றுக்கு எதிராக நாம் ஒன்றிணைந்து போராடி வருகிறோம். இந்த ஒற்றுமை தொடரவும், மென்மேலும் வலுப்பெறவும் என இந்த உகாதி நாளில் உறுதியேற்போம்!

வண்ணக் கோலம், அறுசுவையும் அடங்கிய பச்சடி, விருந்துடன் எழுச்சியோடும் மகிழ்ச்சியோடும் உகாதியைக் கொண்டாடும் தெலுங்கு, கன்னட மொழிபேசும் உடன்பிறப்புகள் அனைவருக்கும் மீண்டும் எனது உகாதி நல்வாழ்த்துகள்! வரும் மே மாதம் அமையவுள்ள திராவிட மாடல் 2.0- அரசுக்கும் இந்த உகாதி தொடக்கமாக அமையட்டும்!

இவ்வாறு தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தெரிவித்துள்ளார்.